தருமபுரி மாவட்டத்தில்

# 32 பேருக்கு கொரோனா பாதிப்பு

தருமபுரி, ஆக.7–

தருமபுரி மாவட்டத்தில் நேற்று ஒரேநாளில் 22 பேர் கொரோனாவல் பாதிக்கப்பட்டு. தருமபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளனர். தருமபுரி மாவட்டத்தில் மொத்தம் 26,276 பேர் கொரோனாவால் பாதிக்கப் பட்டுள்ளனர். இதில் 25,706 பேர் குணமாகி வீட்டிற்கு திரும்பி சென்றனர். மொத்தம் 335 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். மாவட்டத்தில் மொத்தம் 235 பேர் இது வரை கொரோனாவால் இறந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பொம்மிடி அருகே

# கிணற்றில் மூழ்கி சிறுவன் பலி

பாப்பிரெட்டிப்பட்டி, ஆக.7–

தருமபுரி மாவட்டம் பொம்மிடி அருகே வத்தல் மலை ஊராட்சிக்குட்பட்ட ஒன்றிய காடு பகுதியைச் சேர்ந்தவர் விவசாயி காமராஜ். இவரது மகன் ஸ்ரீநாத் (வயது 9). இவர் நேற்று மதியம் நண்பர்களுடன் தனது விவசாய கிணற்றில் குளிக்க சென்றுள்ளார்.

கிணற்றில் மூழ்கி பலி

அப்போது ஸ்ரீநாத் சேற்றில் சிக்கி மூழ்கி விட்டார். இதை கண்ட அவரது நண்பர்கள் நடந்த சம்பவத்தை மக்களிடம் தெரிவித்தனர். இதையடுத்து அவர்கள், கிராம நிர்வாக அலுவலர் முருவேலுக்கு தகவல் கொடுத்தனர்.

அதன்பேரில் சம்பவ இடத்திற்கு வந்து பார்வை யிட்டு அவர், பொம்மிடி போலீஸ் நிலையத்தில் புகார் கொடுத்தார். இதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் ஸ்ரீநாத் உடலை மீட்டு, தருமபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இது குறித்து பொம்மிடி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

சொத்து தகராறில்

# தாயை கொன்ற மகனுக்கு ஆயுள் தண்டனை

## கிருஷ்ணகிரி கோர்ட்டு தீர்ப்பு

குருபரப்பள்ளி, ஆக.7–

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அடுத்த சிகரலப்பள்ளி அருகே உள்ள தபால்மேடு பகுதியை சேர்ந்தவர் சுரேந்திரன்(51). விவசாயி. இவரது தாய் நீலாவதி(71). குடும்ப சொத்தை பிரித்து கொடுப்பதில், தாய் மற்றும் மகனுக்கும் இடையே தகராறு இருந்து வந்துள்ளது.

வெட்டிக்கொலை

இந்த நிலையில் கடந்த 2018ம் ஆண்டு ஜூலை மாதம் 24ம் தேதியன்று சிகரலப்பள்ளி அடுத்த தெள்ளபெண்டா என்ற இடத்தில் தனது மாந்தோப்பில் நீலாவதி வேலை செய்து கொண்டிருந்தார். அங்கு சென்ற சுரேந்திரன், சொத்தை பிரித்து கொடுக்க கூறி தகராறில் ஈடுபட்டுள்ளார்.

அப்போது ஆத்திரம் அடைந்த சுரேந்திரன், தனது தாய் நீலாவதியை அரிவாளால் வெட்டி கொலை செய்தார். அதை தடுக்க முயன்ற அங்கிருந் தவர்களை கொலை செய்து விடுவேன் என மிரட்டி யுள்ளார்.

இதுகுறித்து பர்கூர் போலீசார், கொலை மற்றும் கொலை மிரட்டல் விடுத்த சுரேந்திரனை கைது செய்தனர். இந்த வழக்கு விசாரணை கிருஷ்ணகிரி மகளிர் நீதிமன்றத்தில் நடந்து வந்தது. விசாரணை முடிந்த நிலையில் நேற்று நீதிபதி லதா தீர்ப்பு வழங்கினார்.

ஆயுள் தண்டனை

அந்த தீர்ப்பில், சுரேந்தி ரனுக்கு, தாயை கொலை செய்த குற்றத்திற்காக ஆயுள் தண்டனையும், ரூ.2 ஆயிரம் அபராதமும், அபராதம் கட்ட தவறினால் கூடுதலாக ஓராண்டு சிறைத் தண்டனை விதித்தும், கொலை மிரட்டல் விடுத்த குற்றத் திற்காக ஓராண்டு சிறைத்தண்டனையும், ரூ. ஆயிரம் அபராதமம், அபராதம் கட்ட தவறினால் மேலும் 6 மாதம் சிறைத்தண்டனையும் விதித்து, இந்த தண்டனையை ஏககாலத்தில் அனுபவிக்க வேண்டும் என தனது தீர்ப்பில் குறிப்பிட்டார். இதை யடுத்து சுரேந்திரனை போலீசார் வேலூர் மத்திய சிறைச்சாலையில் அடைத் தனர்.



ஆடி வெள்ளியையொட்டி கிருஷ்ணகிரி அக்ரஹாரம் சிவாஜி நகரில் உள்ள அம்மா பவானி கோவிலில் அம்மன் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

ஊத்தங்கரை அருகே

# தலையில் கல் விழுந்து முதியவர் பலி

ஊத்தங்கரை, ஆக.7–

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை, நொச்சிப்பட்டி அடுத்த கனகம்பட்டியை சேர்ந்தவர் திருமலை (வயது 57), விவசாயி. இவரது நிலத்தில் விவசாய கிணற்றில் கடந்த 4–ந் தேதி உப்பாரப்பட்டியை சேர்ந்த பொன்னுசாமி (70) வேலை பார்த்தார்.

அப்போது கிணற்றின் அருகே பணியில் ஈடுபட்டிருந்த உப்பாரப் பட்டியை சேர்ந்த கிரேன் டிரைவர் முருகன் (51) கற்களை அகற்றும்போது பொன்னுசாமியின் தலையில் கல் விழுந்தது. இதில் அவர் படுகாயம் அடைந்தார். உடனே அருகில் இருந்தவர்கள் அவரை மீட்டு, ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் பரிதாபமாக பொன்னுசாமி இறந்தார்.

இதுகுறித்து பொன்னு சாமியின் மகன் ராமன் ஊத்தங்கரை போலீசில் புகார்செய்தார். அதன்பேரில் திருமலை மற்றும் கிரேன் டிரைவர் முருகன் ஆகியோர் மீது வழக்குப்பதிவு செய்து, ஊத்தங்கரை போலீசார் விசாரித்து வருகின்றனர்.

மாலை மலர்
விளம்பரம் பேப்பர் விற்பனை ஆண்டு சந்தா விவரங்களுக்கு
TOLL FREE 1800 425 5488
10.00 A.M-6.00 P.M
அழைக்கவும்

# தருமபுரி - கிருஷ்ணகிரி



செல்போன் கொள்ளையடிக்கபட்ட கண்டெய்னர் லாரியை படத்தில் காணலாம்.

கண்டெய்னர் லாரியில் ரூ.6 கோடி செல்போன்கள் கொள்ளை:

# கொள்ளை கும்பலை பிடிக்க வடமாநிலங்களுக்கு கர்நாடக போலீசார் விரைந்தனர்

ஓசூர், ஆக.7–

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத்தில் இருந்து, ரூ.6 கோடி மதிப்பிலான செல்போன்களை ஏற்றிய கன்டெய்னர் லாரி, ஓசூர், பாகலூர் வழியாக, கர்நாடகா மாநிலம் கோலார் பகுதி நோக்கி நேற்று மாலை சென்றது. அந்த லாரியில் டிரைவராக சுரேஷ் இருந்தார். கிளீனராக ஒரு வாலிபர் இருந்தார்.

செல்போன்கள் கொள்ளை

அவர்கள் லாரியில் செல் போன்களை ஏற்றிக் கொண்டு காஞ்சீபுரத்தில் இருந்து கர்நாடக மாநிலம் கோலார் மாவட்டம் வழியாக பெங்களூருவுக்கு நேற்று நள்ளிரவில் வந்து கொண் டிருந்தனர். அவர்கள் கோலார் மாவட்டம் முல்பாகல் தாலுகா தேவரசமுத்ரா பகுதியில் பெங்களூரு தேசிய நெடுஞ்சாலையில் வந்து கொண்டிருந்தனர். அப்போது அந்த லாரியை பின்தொடர்ந்து ஒரு கார் வந்தது. திடீரென அந்த கார், லாரியை முந்திச்செல்ல முகப்பு விளக்குகளை ஒளிர விட்டு சிக்னல் கேட்டது.

இதையடுத்து அந்த காருக்கு, லாரி டிரைவர் சுரேஷ் வழிவிட்டார். அப்போது அந்த கார், லாரியை முந்திச்சென்றது. பின்னர் திடீரென அந்த கார், லாரியை வழிமறித்து நின்றது. இதனால் அதிர்ச்சி அடைந்த டிரைவர் சுரேஷ், லாரியை நிறுத்தினார். அப்போது காரில் இருந்து கத்தி, அரிவாள் உள்ளிட்ட பயங்கர ஆயுதங்களுடன் ஒரு கும்பல் இறங்கியது. அந்த கும்பல் லாரி டிரைவர் சுரேசையும், கிளீனரையும் கத்தி முனையில் தாக்கினர். பின்னர் அவர்களின் கை, கால்களை ஒரு மரத்தில் அந்த கும்பல் கட்டிப்போட்டது.

அதையடுத்து அந்த கும்பல் லாரியில் இருந்து ரூ.6 கோடி மதிப்பிலான செல்போன்களை திருடி மற்றொரு லாரியைக் கொண்டு வந்து ஏற்றியது. பின்னர் அந்த லாரியை கொள்ளை கும்பல் அனுப்பி வைத்து விட்டது.

இந்த நிலையில் மரத்தில் கட்டப் பட்ட நிலையில் இருந்த டிரைவர், கிளீனரை அக்கம் பக்கத்தினர் மீட்டு, மருத்துவமனைக்கு அனுப்பினர். இந்த சம்பவம் குறித்து முள்பாகல் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து நேரன ஹள்ளிகேட்டில் கன்டெய் னர் லாரியை போலீ சார் மீட்டனர். ஆனால் அதில் செல் போன்கள் இல்லை.

காமிரா மூலம்

மற்றொரு லாரியில் செல் போன்களை மர்ம கும்பல் எடுத்து சென்றது தெரிய வந்தது. அதனால், அப்பகுதியில் இருந்த, 'சிசி டிவி' கேமரா காட்சிகளை வைத்து கோலார் மாவட்ட போலீசார் விசாரித்து வருகின்றனர். போலீசாரின் முதல் கட்ட விசாரணையில் செல்போன் கொள்ளையில் வடமாநில கும்பல் ஈடுபட்டுள்ளது தெரிய வந்தது. இதனால் கொள்ளை கும்பலை பிடிக்க கர்நாடக போலீசார் மத்திய பிரதேசம், ஓரிசா, பீகார் மாநிலங்களுக்கு விரைந்துள்ளனர்.

## மீண்டும் ஒரேபாணியில் செல்போன்கள் கொள்ளை

கிருஷ்ணகிரி மாவட்டம் சூளகிரி அருகே மேலுமலை என்ற இடத்தில் கடந்த அக்டோபர் மாதம் கண்டெய்னர் லாரியில் ஏற்றிச் சென்ற ரூ.15 கோடி மதிப்புள்ள செல்போன்களை வடமாநில கும்பல் கொள்ளையடித்து சென்றனர்.

இதையடுத்து ஓசூர் போலீசார் ஒரு மாதமாக மத்தியபிரதேசத்தில் முகாமிட்டு 10–க்கும் மேற்பட்ட கும்பலை பிடித்து கைது செய்தனர். இதே கும்பல் ஆந்திர மாநிலம் நகரி உட்பட பல்வேறு இடங்களிலும் பல கோடி மதிப்புள்ள செல்போன்களை கொள்ளையடித்து சென்றுள்ளனர். தற்போது இதே பாணியில் கண்டெய்னர் லாரி டிரைவரை கட்டி போட்டு வடமாநில கும்பல் ரூ. 6 கோடி மதிப்பிலான செல்போன்களை கொள்ளையடித்து சென்றுள்ளனர். எனவே இந்த கொலையில் வடமாநில கும்பல் ஈடுபட்டிருக்கலாம் என்று போலீசார் சந்தேகித்து வருகிறார்கள். அந்த அடிப்படையில் கர்நாடகா போலீசார் தீவிர விசாரணையில் இறங்கி யுள்ளனர். வடமாநில கொள்ளையர்களை பிடிக்க கர்நாடகா போலீசார் , வடமாநிலங்களுக்கு சென்று முகாமிட்டு விசாரித்து வருகிறார்கள்.



ஓசூரில்

# மதுசூதனன் மறைவிற்கு அஞ்சலி

ஓசூர், ஆக.7–

அ.தி.மு.க. அவைத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான மதுசூதனன் உடல்நலக்குறைவால், நேற்று முன்தினம் சென்னையில் காலமானார்.

இந்தநிலையில், கிருஷ் ணகிரி மேற்கு மாவட்ட அ.தி.மு.க.சார்பில் அவரது மறைவிற்கு அஞ்சலிசெலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது. ஓசூர் பாக லூர் அட்கோ பகுதியில் உள்ள கட்சி அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சிக்கு மேற்கு மாவட்ட செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பாலகிருஷ்ணரெட்டி தலைமை தாங்கி, மதுசூ தனன் படத்திற்கு மலர் தூவி, பூஜை செய்து அஞ்சலி செலுத்தினார். மேலும், 2 நிமிடம் மவுனம் கடைபிடிக்கப்பட்டது. இதில், மாவட்ட துணைசெயலாளர் கே.மதன், மாவட்ட ஜெயலலிதா பேரவை செயலாளர் சிட்டி ஜெகதீசன், அமைப்பு சாரா ஓட்டுனர் பிரிவு மாவட்ட செயலாளர் சென்ன கிருஷ்ணன், கூட்டுறவு வீடு கட்டும் சங்க தலைவர் எம். நடராஜன், மாவட்ட சிறுபான்மை பிரிவு துணைத்தலைவர் அரப்ஜான், முன்னாள் நகர் மன்ற உறுப்பினர்கள் நந்தகுமார், லோகநாதன் மற்றும் கட்சியினர் பலர் கலந்துகொண்டனர்.

ஆட்டோ ஓட்டியபோது வலிப்பு:

# விபத்தில் சிக்கி டிரைவர் பலி

ஓசூர், ஆக.7–

கர்நாடக மாநிலம், மாலூர் அடுத்த அஞ்சப்பனஹள்ளியை சேர்ந்தவர் ராகவேந்திரா (வயது 30). ஆட்டோ டிரைவர்

இவர், சம்பவத்தன்று பயணிகள் சிலரை ஏற்றி கொண்டு பேரிகை – மாஸ்தி சாலையிலுள்ள கே.என். தொட்டி அருகே சென்றார்.

அப்போது திடீரென வலிப்பு ஏற்பட்டதால் அவரது கட்டுப்பாட்டை இழந்த ஆட்டோ, சாலையோர பள்ளத்தில் இறங்கி கவிழ்ந்தது. இதில் படுகாயமடைந்த டிரைவரை மீட்ட அக்கம் பக்கத்தினர், ஓசூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் செல்லும் வழியில் அவர் பரிதாபமாக இறந்தார். ஆட்டோவில் பயணம் செய்த பவானி என்பவர் காயமடைந்தார்.

இதுகுறித்து பேரிகை இன்ஸ்பெக்டர் மனோகரன் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகிறார்.

# மயிலாடும்பாறை அகழாய்வில் மண்பானைகள் கண்டுபிடிப்பு

மத்தூர்ஆக.7–

மயிலாடும்பாறையில், 2,500 ஆண்டுகளுக்கு முன், முன்னோர் பயன்படுத்திய மண்பானைகளின் உடைந்த ஓடுகள் கிடைத்துள்ளன.

அகழாய்வு

கிருஷ்ணகிரி மாவட்டம், தொகரப்பள்ளி அடுத்த மயிலாடும்பாறை என்னுமிடத்தில், தமிழ்நாடு தொல் லியல் துறை சார்பில், கடந்த மார்ச் மாதம் முதல் அகழாய்வு பணி நடக்கிறது. இதில், மலையடிவாரத்தில் இறந்தவர்களை அடக்கம் செய்யுமிடத்தில், முன்னோர் பயன்படுத்திய பானை, வாள், கோடடரி போன்றவைகள் கிடைத்தன.

தற்போது அங்கிருந்து, 2 கிலோ மீட்டர் தொலைவில், 2,500 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மக்கள் பயன்படுத்திய மண் பானைகளின் ஓடுகள் மற்றும் கால்நடைகளின் எலும்புகள் கிடைத்துள்ளன.

இது குறித்து, மயிலாடும் பாறை அகழாய்வு இயக்குனர் சக்திவேல் கூறுகையில், "வரும் காலங்களில் முன்னோர் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் கிடைக்கும்." என்றார்.



அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்ட மண்பானை ஓடுகள், கால்நடை எலும்புகள்.

# வக்கீலை பார்க்க சென்ற விவசாயி 'திடீர்' கடத்தல்

## 10 பேர் மீது வழக்கு–பரபரப்பு

சேலம், ஆக.7–

சேலம் கருப்பூர் அருகே உள்ள வட்டக்காடு காட்டு வளைவு பகுதியில் 50–க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகிறார்கள்.

இவர்கள் டால்மியா போர்டு பகுதிக்கு வர வேண்டுமானால் அந்த பகுதியை சேர்ந்த விவசாயி குப்புசாமி என்பவருக்கு சொந்தமான நிலம் வழியாக தான் வர வேண்டும். இந்த வழிப்பாதைக்கு மேலும் சிலரும் இடம் கொடுத்துள்ளதாக கூறப்படுகிறது. ஆனால் இந்த வழித்தடம் தன்னுடைய பட்டா நிலம் என குப்புசாமி சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள்ளார். இந்த வழக்கு நிலுவையில் உள்ளது.

இதற்கிடையே நேற்று முன்தினம் குப்புசாமி யாரும் செல்ல முடியாத படி அந்த வழிப்பாதையில் பள்ளம் தோண்டினார். இதனால் ஆத்திரம் அடைந்த எதிர் தரப்பை சேர்ந்தவர்கள் குப்புசாமி செல்லும் பாதையில் பள்ளம் தோண்டினர். இதனால் மோதல் ஏற்படும் சூழ்நிலை உருவானது. அடுத்து 50–க்கும் மேற்பட்ட குடும்பத்தை சேர்ந்தவர்கள் பள்ளத்தில் அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தகவல் அறிந்து அங்கு சென்ற போலீசார் அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினர். மேலும் வெட்ட ப்பட்ட பள்ளத்தை மூடுவதற்கு வருவாய் த்துறை யினருடன் சேர்ந்து போலீசார் நடவடிக்கை எடுத்தனர். ஆனால் ஒரு தரப்பினர் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதற்கிடையே குப்புசாமி மகன் தமிழ்மணி கருப்பூர் போலீசில் ஒரு புகார் கொடுத்தார். அதில், நிலப்பிரச்சினை தொடர்பாக எனது தந்தை வக்கீலை பார்க்க சென்றார். இது வரை வீடு திரும்பவில்லை. அவரது மோட்டார் சைக்கிளும், செல்போனும் காட்டுப்பகுதியில் கிடக்கிறது. அவரை 10 பேர் கொண்ட கும்பல் கடத்தி சென்றுவிட்டனர் என கூறி இருந்தார்.

இதையடுத்து போலீசார் விசாரணை நடத்தி வருகி றார்கள். குப்பு சாமி கடத்தப் பட்டாரா? அல்லது வேறு எங்காவது மறைந்து ள்ளாரா? என்ற சந்தேகம் போலீசாருக்கு எழுந்துள்ளது. தொடர்ந்து போலீசார் அவரை தேடி வருகிறார்கள்.

ஆனால் அவரது கதி என்ன என்பது தற்போது வரை மர்மமாக உள்ளது. இதற்கிடையே தமிழ்மணி கொடுத்த புகாரின் பேரில் 10 பேர் மீது வழக்கு பதிவு செய்து போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

**தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி லிமிடெட்,**
எண்.4, (பழைய எண்.233), நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலை, சென்னை - 600 001 தொலைபேசி.: 044-25302352
தொலை நகல் : 044-2534 0508 மின்னஞ்சல் : contact@tnscbank.com வலைதளம் : www.tnscbank.com

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, தலைமையகம், எண் 4, பழைய எண் 233, நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலை, சென்னை – 1க்கு, ஒப்பந்த அடிப்படையிலான துப்புரவாளர்கள், ஏவலர்கள், "B" சான்றிதழ் பெற்ற மின்பணியாளர்கள், பிளம்பர், ஓட்டுநர்கள், மற்றும் வங்கிக்குச் சொந்தமான மாதவரத்தில் இயங்கிவரும் விவசாயக் கூட்டுறவு பணியாளர்கள் பயிற்சி நிலையத்திற்குத் (ACSTI) தேவையான கட்டட காப்பாளர் (Caretaker), பராமரிப்பு / துப்புரவுப் பணியாளர்கள் மற்றும் பாதுகாவலர்கள் பணிகளுக்கு சென்னையிலுள்ள ஏதேனும் ஒரு அலுவலகத்தில் இதுபோன்ற சேவையில் முன் அனுபவம் உள்ள, சென்னை மாநகரை மையமாகக் கொண்டு செயல்படும் நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப்புள்ளி படிவம் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய விவரங்களை வங்கியின் மூன்றாம் தளத்தில் துணைப் பொது மேலாளர் (பொ), (சொத்துப்பிரிவு) அவர்களிடமிருந்து 07.08.2021 முதல் 21.08.2021 வரை (வங்கி விடுமுறை தினங்கள் நீங்கலாக) காலை 11 மணி முதல் மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் 21.08.2021 அன்று மாலை 3 மணி வரை பெற்றுக் கொள்ளப்படும். 23.08.2021 அன்று காலை 11 மணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் www.tnscbank.com மற்றும் www.tenders.tn.gov.in என்ற இணையதளங்களிலிருந்து இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

செமதொஇ/2333/ஒப்பந்தப்புள்ளி/2021 துணைப் பொது மேலாளர்(பொறுப்பு)

**காணவில்லை**

கீழ்கண்ட முகவரியில் வசிக்கும் P.சந்திரா ஆகிய என்னுடைய கணவர் பெயரில் உள்ள கிருஷ்ணகிரி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதியப்பட்ட நிலப்பத்திரம் (எண்:1384/1983) 02.07.2021 அன்று காட்டிநாயனப்பள்ளி கிராம நிர்வாக அலுவலகம் முன்பு ஜெராக்ஸ் எடுக்க செல்லும் போது தொலைந்து விட்டது. எங்கு தேடியும் கிடைக்கவில்லை. இது தொடர்பாக காவல் துறையில் ஆன்லைன் புகார் (புகார் எண்: CRC21099271) அளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பத்திரத்தை கண்டெடுத்தவர்கள் கீழ்கண்ட முகவரிக்கு தகவல் தெரிவிக்கவும்.

முகவரி: **P.சந்திரா,** க/பெ.பெருமாள்
**எண்:1/310, போடியப்பன் நகர், கரடிகுறி அஞ்சல்,**
**கிருஷ்ணகிரி. செல்: 8903243430**

கனம் வருவாய் கோட்டாட்சியர்
கிருஷ்ணகிரி
மே.எ.அ.தி.மு.1281/2019
நாள்: 13.11.2019
காளியப்பன்
த/பெ. மதார் (எ) சின்னவெங்கட்ராமன்
3/132, பைரவிக் கொட்டாய்
வேட்டியம்பட்டி (Vill)
பெத்தனப்பள்ளி (Po)
கிருஷ்ணகிரி (Tk & Dt).
– மனுதாரர்
இடையே
வட்டாட்சியர், கிருஷ்ணகிரி.
– எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மனுதாரர் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறார். மேற்படி மனுதாரர் காளியப்பன் தனது தந்தை மதார் (எ) சின்னவெங்கட்ராமன் என்பவர் 16.03.1985 அன்று இறந்து விட்டார். மேற்படியார் இறப்புத் தேதியில் யாருக்காவது ஏதாவது ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளியிட்ட 15 நாட்களுக்குள் கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அலுவலகத்தில் தெரிவிக்கலாம். தவறும் பட்சத்தில் தீர்ப்பு ஒருதலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

//சார் ஆட்சியர் உத்திரவுப்படி//
M.பாஸ்கரன், B.A.,LL.B.,
வழக்கறிஞர் & நோட்டரி
கிருஷ்ணகிரி.

**தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி லிட்.,**
எண்.4, (பழைய எண்.233), நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலை, சென்னை - 600 001
தொலைபேசி : 044-2530 2323, 2530 2330, தொலை நகல் : 044-2534 0508 மின்னஞ்சல் : contact@tnscbank.com

**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, தலைமையகம், எண்.4 (பழைய எண்.233), நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலை, சென்னை-1 க்கும் மற்றும் அதன் இதர 47 கிளைகளுக்கும் (மாதவரத்தில் உள்ள விவசாயக் கூட்டுறவுப் பணியாளர் பயிற்சி நிலையத்தையும் சேர்த்து) ஒப்பந்த அடிப்படையிலான ஏவலர் பணிக்கு தேவையான, சென்னையிலுள்ள ஏதேனும் ஒரு அலுவலகத்தில் இதுபோன்ற சேவையில் முன் அனுபவம் உள்ள சென்னை நகரை மையமாகக் கொண்டு செயல்படும் ஊழியப்பணி நிறுவனங்களிடமிருந்து (Service Agencies) ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளி விண்ணப்பம் மற்றும் நிபந்தனைகள் அடங்கிய விவரங்களை துணைப் பொது மேலாளர் (நிர்வாகம்) (பொறுப்பு) (வங்கியின் மூன்றாம் தளம்) அவர்களிடமிருந்து 07.08.2021 முதல் 21.08.2021 வரை (இரண்டாம், நான்காம் சனிக்கிழமை மற்றும் அனைத்து ஞாயிறு நீங்கலாக) காலை 11.00 மணி முதல் மாலை 03.00 மணி வரை பெற்றுக் கொள்ளலாம். 23.08.2021 அன்று பிற்பகல் 02.00 மணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும். ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் www.tnscbank.com மற்றும் www.tenders.tn.gov.in என்ற இணையதளங்களிலிருந்து இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

| | |
|---|---|
| விண்ணப்பங்கள் பெற கடைசி நாள் | 21.08.2021 பிற்பகல் 02.00 மணி வரை |
| விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கும் கடைசி நாள் | 21.08.2021 பிற்பகல் 3.00 மணி வரை |
| ஒப்பந்தப்புள்ளி திறப்பு நாள் | 23.08.2021 பிற்பகல் 02.00 மணி |

செமதொஇ/2331/ஒப்பந்தப்புள்ளி/2021 துணைப் பொது மேலாளர் (நிர்வாகம்) (பொறுப்பு)

**தமிழ்நாடு அரசு - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**
**ஒப்பந்தப்புள்ளி கோரும்படிவம் எண்.3656/2017/இ1, நாள்: 08.2021.**
**ஒப்பந்த படிவம் இனம் வாரியான விலை (இரட்டை உறை முறை)**

தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும் கிருஷ்ணகிரி மாவட்டம் , ஒசூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலரால் (கி.ஊ), **நேஷனல் ரூர்பன் மிஷன்** (NRuM) (Phase III) 2019–2020 திட்டத்தின்கீழ், **அலசப்பள்ளி பட்வாரப்பள்ளி தொகுப்பில் (Cluster)** மேற்கொள்ளப்படும் பணிக்கு **மின் ஒப்பந்தப் புள்ளிகள்** வரவேற்கப்படுகிறது.

1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in இணையதள முகவரியினை பார்வையிடலாம்.
2. சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி நமூனாவினை www.tntenders.gov.in என்ற இணைய தள முகவரியில் இலவசமாக 07.08.2021 முதல் 07.09.2021 வரையிலான காலத்தில் எடுத்துக் கொள்ளலாம்.
3. மதிப்பீட்டு தொகையில் 1% தொகை முன்வைப்புத் தொகையாக செலுத்தப்பட வேண்டும்.
4. வேலைகள் தொடர்பான கூடுதல் விவரங்கள் மற்றும் நிபந்தனைகள் தேவைப்படின், ஒசூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அலுவலகத்தில் நேரில் தெரிந்து கொள்ளலாம்.
5. ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக முக்கியமான நாட்கள்

| | | |
|---|---|---|
| 1. | முன் ஒப்பந்த கூட்டம் நடைபெறும் நாள் மற்றும் நேரம் | 27.08.2021 மு.ப. 11.00 மணி |
| 2. | மின் ஒப்பந்த நமூனா பதிவிறக்கம் செய்ய கடைசி நாள் மற்றும் நேரம் | 07.09.2021 பி.ப. 3.00 மணி |
| 3. | மின் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் | 07.09.2021 பி.ப. 3.00 மணி |
| 4 | மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் | 07.09.2021பி.ப. 4.00 மணி |

செ.மா.தொ.இ./ 2311 / ஒப்பந்தப்புள்ளி / 2021 **வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), ஒசூர்.**

கர்நாடக அணைகளில் கூடுதல் தண்ணீர் திறப்பு

# மேட்டூர் அணைக்கு மீண்டும் நீர்வரத்து அதிகரிக்க வாய்ப்பு

மேட்டூர், ஆக.7–

கேரளா மற்றும் கர்நாட காவில் காவிரி நீர்ப் பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததால் கர்நாடக அணைகளுக்கு நீர்வரத்து படிப் படியாக குறைந்தது. இதை யடுத்து அந்த அணைகளில் இருந்து திறந்து விடப்பட்ட தண்ணீரின் அளவு குறைக்கப்பட்டதால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப் படியாக சரிந்து வருகிறது. அணைக்கு வரும் தண்ணீரை விட அணையில் இருந்து கூடுதல் தண்ணீர் திறந்து விடப்படுவதால் அணையின் நீர்மட்டம் வேக மாக சரிந்து வருகிறது. நேற்று 78.4 அடியாக இருந்த மேட்டூர் அணை நீர்மட்டம் இன்று மேலும் சரிந்து 77.26 அடியானது. இதற்கிடையே கர்நாடகா மற்றும் கேரளாவில் காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த மழையால் கர்நா டகாவில் உள்ள கபினி மற்றும் கிருஷ்ணராஜசாகர் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் அந்த அணைகளில் இருந்து நேற்று முதல் மீண்டும் உபரி நீர் 9 ஆயிரத்து 187 கன அடி தண்ணீர் திறந்து விடப் பட்டுள்ளது.

இந்த தண்ணீர் ஒகேனக்கல் வழியாக நாளை மாலை மேட்டூர் அணைக்கு வந்து சேரும் என எதிர் பார்க்கப்படுகிறது. இதனால் மேட் டூர் அணைக்கு இனி வரும் நாட்களில் நீர் வரத்து மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

**TANEJA AEROSPACE AND AVIATION LIMITED**
**Regd. Office:** Belagondapalli Village, Thally Road, Denkanikottai Taluk, Krishnagiri Dist., Belagondapalli - 635114, Tamil Nadu, India | **Phone :** 04347-233508,| **Fax :** 04347-233414
E-mail : secretarial@taal.co.in | **Website :** www.taal.co.in | **CIN :** L62200TZ1988PLC014460

**EXTRACT OF THE STATEMENT OF CONSOLIDTED FINANCIAL RESULTS FOR THE QUARTER ENDED JUNE 30, 2021**

(INR in Lacs, unless otherwise stated)

| Sr. No. | Particulars | Quarter Ended | | | Year Ended |
|---|---|---|---|---|---|
| | | 30-Jun-21 (Unaudited) | 30-Jun-20 (Unaudited) | 31-Mar-21 (Audited) | 31-Mar-21 (Audited) |
| 1 | Total Income from operations (Net) | 622.04 | 595.33 | 979.41 | 3,481.50 |
| 2 | Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and/or Extraordinary items) | 232.60 | 109.72 | 202.10 | 826.79 |
| 3 | Net Profit / (Loss) for the period before tax (after Exceptional and/or Extraordinary Items) | 232.60 | 109.72 | 202.10 | 826.79 |
| 4 | Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and/or Extraordinary items) | 198.91 | 90.16 | 101.16 | 621.85 |
| 5 | Total Comprehensive Income for the period [Comprising Profit / (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)] | 198.91 | 90.16 | 99.43 | 620.12 |
| 6 | Equity share capital | 1,246.54 | 1,246.54 | 1,246.54 | 1,246.54 |
| 7 | Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year | - | - | - | 9,210.06 |
| 8 | Basic and Diluted Earnings Per Share (of Rs. 5/- each) (not annualised) (INR) | 0.80 | 0.36 | 0.41 | 2.49 |

**Notes :**
1 **Additional information on standalone financial results is as follows:**

| Particulars | Quarter Ended | | | Year Ended |
|---|---|---|---|---|
| | 30-Jun-21 | 30-Jun-20 | 31-Mar-21 | 31-Mar-21 |
| Revenue from Operations | 597.61 | 593.88 | 960.83 | 3,452.01 |
| Profit before tax | 232.61 | 109.73 | 203.01 | 827.69 |
| Profit after tax | 198.92 | 90.17 | 102.07 | 622.75 |

2 The above is an extract of the detailed format of quarterly financial results filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the quarterly financial results are available on the Stock Exchange website (www.bseindia.com) and also on the Company's website (www.taal.co.in).
3 The above results have been reviewed by the Audit Committee & approved by the Board of Directors at their respective meetings held on August 05, 2021.

Place : Bangalore
Date : August 05, 2021

For Taneja Aerospace and Aviation Limited
Ramesh Jaiswara
Whole Time Director